Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CRMP NO.310/2026

**SWORN STATEMENT OF DEFACTO COMPLAINANT**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.இஎம் யூசுப் செரீப் | Occupation | |
| Father's name | மகபூப் செரீப் | Calling | |
| Village | திருவில்லிபுத்தூர் | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 15th day of May 2026.

15.05.2026

நான் திருவில்லிபுத்தூரில் குடியிருந்து வருகிறேன். நான் வீட்டிலிருந்து வருகிறேன். நான் தற்போது திருவில்லிபுத்தூரிலுள்ள முஸ்லீம் தக்னி ஜமாத்தின் தலைவராக உள்ளேன். எங்களது ஜமாத் கடந்த 60 முதல் 70 வருடங்களாக இயங்கி வருகிறது. கடந்த 2013ம் வருடம் மகாசபைகூட்டத்தில் என்னை திருவில்லிபுத்தூரிலுள்ள ஜமாத்தின் தலைவராக தேர்ந்தெடுத்தார்கள். நானும் எனது நிர்வாக கமிட்டியும் நிர்வாகத்திற்கு வந்த பின்பு மேற்படி ஜமாத்திற்கு முறையாக அரசு பதிவு எண்ணான 140/2013 பெற்றோம். அதனை முறைப்படியும் நடத்திகொண்டு வருகிறோம். அதன் பின்னர் 3 முறை மகா சபை கூட்டத்தில் என்னை தலைவராக தேர்ந்தெடுத்து தற்போது வரை நான் தலைவராக இருந்து வருகிறேன். என்னை பிடிக்காத எங்கள் ஜமாத்தை சேர்ந்த 7, 8 நபர்கள் என் வீட்டிலிருந்த ஜமாத்தின் புத்தகங்கள், நோட்டுகள், காசோலைகள் ஆகியவற்றை எடுத்து சென்று உபயோகித்துக்கொண்டார்கள்.

அதுதொடர்பாக இந்நீதிமன்றத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய உத்தரவிடக்கோரி CRMP.1243/2024 மனுதாக்கல் செய்யப்பட்டு அதில் பிறப்பித்த உத்தரவின்படி முதல் தகவல் அறிக்கை எண்.576/2025 பதிவு செய்யப்பட்டது. அதில் சாதிக்செரீப், முகமது சித்திக், இமாம் காசிம், முகமது அபுதாகீர் ஆகியோர் குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் ஆவார்கள். மேற்படி நபர்களும் அவர்களுடன் சேர்ந்த 5 நபர்களும்

தாங்கள் தான் தலைவர் மற்றும் பொருளாளர் என்று கூறிக்கொண்டு லெட்டர் பேடு அடித்து நாங்கள் நடத்தி வந்த முஸ்லீம் தக்னி ஜமாத் என்ற பெயரில் நாங்கள் பெற்ற பதிவெண்ணையும் பயன்படுத்தி ரசீது தயார் செய்து உறுப்பினர்களிடம் பணம் வசூலித்துள்ளார்கள். அதனை ஜமாத்தை சேர்ந்த நானும், ஜானி பாக்ஷா, ஷேக் சக்கரிகா, சாதிக்பாட்ஷா ஆகியோர் சென்று தற்போதைய தலைவராக கூறிகொள்ளும் சிக்கந்தர் பாட்சா, ஷேக் அப்துல்ரகீம், முகமது அபுதாகீர், பசீர், ஷேர்கான் ஆகியோர்களிடம் கேட்டபோது அவர்கள் அதற்கு நீங்கள் என்ன கேட்பது நாங்கள் அப்படித்தான் செய்வோம் என்றும் எங்களை வாடா போடா என்றும் கூறிவிட்டார்கள். பின்னர் நாங்கள் வந்துவிட்டோம். பின்னர் திருவில்லிபுத்தூர் நகர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோம். ஆனால் அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. மேற்படி சங்கதிகள் சம்மந்தமாக விருதுநகர் மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு தபால் மூலம் புகார் அனுப்பினேன். ஆனால் அதற்குள் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதனால் மேற்படி நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க கோரி இம்மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். **மேற்படி நபர்கள் புதிதாக லெட்டர் பேடு அடித்து எனக்கு அனுப்பப்பட்ட அறிவிப்பு புசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.